பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 10 2024 6 45
திங்கள்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடியும் ஸ்பெயின் பிரதமர் திரு. **Pedro Sanchez**-ம் இணைந்து வதோதராவில் உள்ள விண் ஊர்தி வளாகத்தில் **C-295** ரக விமான உற்பத்தியை இன்று தொடங்கி வைக்கின்றனர்.

- இணையதளம் வழியாக விசாரணை அமைப்பு அதிகாரிகள் போல் போலியாக நடித்து மக்களை ஏமாற்றுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- தமிழகத்தில் போதைப்பொருட்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், அதனைக் கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாகவும் பிஜேபியின் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. எச். ராஜா குற்றம் சாட்டியுள்ளார்.

- தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒருசில தினங்களே உள்ள நிலையில் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

- இத்தாலியில் நடைபெற்ற டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய மகளிர் இணை வெற்றி பெற்றுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், இந்தியாவிற்கு வருகை தந்துள்ள ஸ்பெயின் நாட்டு பிரதமர் திரு. **Pedro Sanchez**-ம் இணைந்து வதோதராவில் உள்ள டாடா விண் ஊர்தி வளாகத்தில் **C-295** ரக விமான உற்பத்தியை இன்று தொடங்கி வைக்கின்றனர்.

இந்தியாவில் முதல் முறையாக தனியார் நிறுவனம், விமானப் படைக்காக பயன்படுத்தப்பட இருக்கும் விமானங்களை தயாரிக்க உள்ளது.

இதற்கு பொதுத்துறை நிறுவனமான பாரத் எலக்ட்ரானிக்ஸ், பாரத் டயனமிக்ஸ் மற்றும் சிறு குறு நிறுவனங்கள் ஒத்துழைப்பு அளிக்க உள்ளன.

இந்த உற்பத்தி மையத்தினை திறந்து வைத்த பிறகு இரு தலைவர்களும் சாலை வழியாக பயணித்து மக்களை சந்திக்கின்றனர்.

அதன் பின்னர் லக்ஷ்மி விலாஸ் அரண்மனையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் பங்கேற்க உள்ளனர்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் முதல் முறையாக தனியார் நிறுவனம் **C-295** ரக விமானங்களை தயாரிக்க இருக்கிறது.

மொத்தம் 56 விமானங்கள் விமானப் படைக்கு வழங்கப்பட உள்ளன.

இதில் 40 விமானங்கள் வதோதரா மையத்தில் இருந்து தயாரிக்கப்படும் என்றும், மீதமுள்ள 16 விமானங்களை ஸ்பெயின் நாட்டின் ஏர்பஸ் நிறுவனம் வழங்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விமானங்கள் 2026ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய விமானப்படைக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

குஜராத் மாநிலத்தின் பூஜ் - நலியா இடையே அமைக்கப்பட்டுள்ள அகல ரயில்பாதை திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவில் சுமார் 101 புள்ளி 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு அகல ரயில்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தப் பகுதிக்கு பயணிகள் எளிதாக சென்றுவர இது உதவும் என்றும், மேலும் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக மேற்கு ரயில்வேயின் தலைமை தகவல் தொடர்பு அதிகாரி திரு. வினித் அபிஷேக் தெரிவித்துள்ளார்.

24 பெரிய பாலங்கள், 254 சிறிய பாலங்கள், 30 சுரங்க வழிப்பாதைகள் இந்தப் புதிய அகல ரயில் பாதை திட்டத்தில் அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

இணையதளம் வழியாக கைது செய்கிறோம் என்று கூறி சிபிஐ, வருமான வரி, போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் போல நடித்து மக்களை ஏமாற்றுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று மனதின் குரல் நிகழ்ச்சியில் இதுகுறித்து விரிவாக எடுத்துரைத்துள்ளதாகவும், இதன்மூலம் பொதுமக்கள் விழிப்புணர்வு அடைந்துள்ளதாக தமது வலைதளப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறையினர், சிபிஐ உள்ளிட்ட விசாரணை அமைப்புகள், தொலைபேசி வழியாகவோ, காணொலி வாயிலாகவோ விசாரணைகளை நடத்துவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற போலி இணையதள நடவடிக்கைகள் குறித்த தகவல்களை 1 9 3 0 எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இணையதள குற்றங்களைத் தடுக்கும் விதத்தல் பாதுகாப்பான இணையதள பயன்பாட்டை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு. அமித் ஷா அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ரயில் நிலையங்களில் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான திருத்தப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறையை ரயில்வே அமைச்சகமும், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமும் இணைந்து வெளியிட்டுள்ளன.

ரயில் பயணத்தின்போது மகளிர் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் ரயில் நிலையங்களில் முகத்தை அடையாளம் காணும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு வருவதாக மகளிர் குழந்தைகள் மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் செயலாளர் திரு. அனில் மாலிக் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாளும் இந்தியாவில் 2 கோடியே 30 லட்சம் பயணிகள் ரயிலில் பயணம் செய்வதாகவும், இதில் 30 சதவீதம் பேர் பெண்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 5 ஆண்டுகளில் 57 ஆயிரத்து 564 குழந்தைகளை கடத்தல்காரர்களிடம் இருந்து ரயில்வே பாதுகாப்புப் படை மீட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரயில் நிலையங்களில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாக அப்படையின் தலைமை இயக்குநர் திரு. மனோஜ் யாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒருசில தினங்களே உள்ள நிலையில் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு கடைகளில் திரண்டுள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திருப்பூர் நகரில் புதுமார்கெட் வீதியில் உள்ள ஜவுளிக்கடைகள் மற்றும் பேன்சி கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

அதிக அளவிலான மக்கள் கூட்டம் கூடுவதையடுத்து, போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறையினர் செய்துள்ளனர்.

மதுரையில் டவுன்ஹால் மற்றும் சித்திரை வீதிகளில் உள்ள கடைகளில் மக்கள் கூட்டம் அதிக அளவில் இருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சென்னை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் தீபாவளி பண்டிகையை ஒட்டி மக்கள் புத்தாடை, பட்டாசுகள், இனிப்புகள் மற்றும் பலகாரங்களை வாங்குவதற்காக அதிக அளவில் மக்கள் குவிந்து வருகின்றனர்.

நாகை மாவட்டத்தில் உரிய உரிமம் பெற்று பட்டாசு கடைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வருவாய்துறை அதிகாரி திருமதி பேபி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான பிஜேபி ஆட்சியில் தமிழகத்தில் 48 லட்சம் விவசாயிகள் பயன்பெற்று வருவதாக அக்கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. எச். ராஜா தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் பிஜேபியின் மாவட்ட அளவிலான தேர்தல் பயிலரங்கு கூட்டத்திற்குப்பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 70 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் காப்பீடு போன்ற மத்திய அரசின் திட்டங்கள் மக்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றுள்ளதாகக் கூறினார்.

தமிழகத்தில் போதைப்பொருட்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், அதனைக் கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

போதைப் பொருட்களை மத்திய புலனாய்வு அமைப்புகள்தான் கைப்பற்றி நடவடிக்கை எடுத்து வருவதாகவும், மாநில அரசு இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

ஜப்பான் நாடாளுமன்றத்திற்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் ஆளும் கூட்டணிக் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் அங்கு புதிய ஆட்சியமைப்பது இழுபறியில் உள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் **Handwara** பகுதியில் காவல்துறையினர் ஒரு தீவிரவாதியைக் கைது செய்துள்ளனர். அவரிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

<<<<>>>>

ஹரியானாவில் உள்ள இளையோர் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருவதற்கு அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் வருமான வரி பிடித்தம் செய்பவர்களின் நலன் கருதி வருமான வரி பிடித்தம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம், அத்துறை ஆணையர் திரு. ராஜா மனோகர் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

திருவாரூரில் பாதாள சாக்கடையில் தனியார் கழிவுநீர் வாகனத்தின் ஓட்டுநர் எதிர்பாராதவிதமாக விழுந்து உயிரிழந்தார். அவரைக் காப்பாற்ற சென்ற மற்றொருவரும் அதில் விழுந்து உயிரிழந்தார்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீபாவளி புத்தாடை பட்டாசு விற்பனை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகரித்துள்ளதாக வியாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே காரும் - டாஸ்மாக் வேனும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் காரை ஓட்டிவந்த உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டம் பெருஞ்பத்திற்கு 25 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படுவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விபத்தில்லா தீபாவளியை கொண்டாடும் வித்ததில் உரிமம் பெற்ற பட்டாசு விற்பனையாளர்களுக்கு தீ விபத்து ஏற்படாமல் எவ்வாறு தடுப்பது என்பது குறித்த செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

<<<<>>>>

மாஞ்சா கயிறு பயன்படுத்தப்படும் பட்டங்களை பறக்கவிட சென்னை பெருநகர காவல்துறை தடை விதித்துள்ளது. மேலும் இந்த மாஞ்சா கயிறு உற்பத்தி மற்றும் விற்பனை கையிருப்பு வைத்தல், இறக்குமதி செய்வது ஆகியவை இதன்மூலம் தடை செய்யப்படுவதாகவும் சென்னை காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் ஆவின் நிறுவனத்தில் பால் மற்றும் உபபொருட்கள் விற்பனை செய்ய ஒப்பந்த அடிப்படையில் 2 விற்பனைப் பிரதிநிதிகள் பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காஞ்சி காமாட்சி அம்மன் ஐப்பசி மாத பூர நட்சத்திரத்தில் பிறந்ததாக ஐதீகம் உள்ளது. இதனையொட்டி இன்று ஆயிரத்து எட்டு பக்தர்கள் பால்குடம் ஏந்தி நடந்து சென்று காமாட்சி அம்மனுக்கு அபிஷேகம் செய்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவு போட்டியில் இந்தியாவின் **Krittwika Rai -Yashaswini Ghorbade** இணை – தென்கொரியாவின் **Yoo Siwoo – Kim Haeun** இணையை வென்றது.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான மகளிர் இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றது.

<<<<>>>>